IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.662/2019

Deposition of Witness PW2

Name : சௌந்தரம் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2025

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்க பெற்று குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

1ம்எதிரி ஆஜர். 2ம் எதிரி இறந்துவிட்டார். 3ம் எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

1,3ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் BSc.Zoology படித்துள்ளேன். எனது பணி என்னவென்றால் நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனியின் Investigator ஆவேன். மேற்படி பணிக்கு என்னை நியமனம் செய்தது மண்டல மேலாளர் ஆவார். மேற்படி பணிக்கு நான் தனிப்பட்ட முறையில் ஏதாவது படித்துள்ளேன்னா என்றால் இல்லை. மேற்படி பணிக்கு என்னை நியமனம் செய்வதற்கு முன்பு மேற்படி பணி சம்பந்தமான முன் அனுபவம் எதுவும் எனக்கு இல்லை என்றால் சரியல்ல இருந்தது. சாட்சி மீண்டும் இந்த பணி சம்பந்தமாக என்னை நியமனம் செய்வதற்கு முன்பு இந்த பணி குறித்து எனக்கு முன் அனுபவம் எதுவும் இல்லை எனக் கூறுகிறார். இந்த வழக்கில் நான் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நான் விசாரணை அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சித்தோடு காவல் நிலைய குற்றவியல் வழக்கு சம்பந்தமான ஆவணங்களை நான் பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். நான் எவ்வாறு பார்வையிட்டேன் என்றால் சித்தோடு காவல் நிலையம் சென்று நகல் வாங்கி பார்வையிட்டேன். நான் சித்தோடு காவல்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.10.07 18:29:40 +0530

நிலையத்தில் வாங்கி பார்த்த நகல்கள் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் நான் காவல் நிலையம் சென்று கேட்டபோது எனக்கு நகல்கள் கொடுத்தார்கள். நான் இன்வெஸ்டிகேட்டர் என்பதற்கு எனக்கு அடையாள அட்டை எதுவும் இல்லை என்றால் சரிதான். ஏனெனில் நான் தனியார் இன்வெஸ்டிகேட்டர். நான் தனியார் இன்வெஸ்டிகேட்டர் என்றாலும் என்னை பணி நியமனம் செய்தது நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி என்றால் சரிதான்.

நான் காவல் நிலையத்தில் முறையாக மனு கொடுத்து நகல்களைப் பெற்றேனா என்றால் இல்லை நான் கேட்டேன் அவர்கள் கொடுத்தார்கள். ஒரு நிறுவனத்தில் முறையாக மனு கொடுத்து தான் அதற்கான ஆவணங்களை பார்வையிட முடியும் என்றும், நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் ஆவணங்களை பார்வையிட்டதாக சொல்வது இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் உண்மையிலேயே ஆவணங்களை பார்வையிட்டு இருந்தால் அது சம்பந்தமான அறிக்கையை நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனிக்கும் அல்லது காவல்துறைக்கோ அல்லது நீதிமன்றத்திடமோ தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறு இல்லாததால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனியிடம் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் அறிக்கை எதுவும் நீதிமன்றத்திற்கு பெறப்படவில்லை என்றும், நான் வழக்கிற்காக அறிக்கை தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விசாரணை செய்வதற்கான உரிய படிப்போ அல்லது அதற்கான அனுபவமோ, தகுதியோ இல்லாமல் நான் விசாரணை செய்ததாக சொல்வது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் எந்த செயலிலும் ஈடுபடவில்லை என்றும், காப்பீட்டு நிறுவனத்திற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சித்தோடு காவல் நிலைய குற்ற வழக்கில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் இறந்து போனவரின்

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2025.10.07 18:29:46 +0530

மனைவி புகார் கொடுத்ததாக ஆவணங்களின் அடிப்படையில் நான் தெரிந்து கொண்டேன். சித்தோடு காவல் நிலையத்தில் கிராம நிர்வாக அலுவலர் சந்திரசேகரன் என்பவர் தான் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை (Cr.No.52/1995) பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஆவணங்களில் உள்ளது என்றால் நீண்ட வருடங்கள் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய முரண்பாடான சாட்சியமே நான் சரிவர விசாரணை செய்யவில்லை என்றும், விசாரணை செய்வதற்கு எனக்கு தகுதியும் இல்லை என்பதற்கு சரியான சாட்சியம் என்றால் சரியல்ல. நான் தற்போது விசாரணை அறிக்கை எதுவும் கொண்டு வரவில்லை என்றால் தற்போது என்னிடம் இல்லை சார்பு நீதிமன்றத்தில் உள்ளது. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2025.10.07 18:29:50 +0530